திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நம்முடைய உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளினுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை வந்ததா? அதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அதற்கெல்லாம் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : வழக்குகளைத் துரிதமாகப் பைசல் செய்வதற்கும், தீர்வு பெறாமல் பாக்கியிருக்கக்கூடிய வழக்குகளைத் துரிதமாக முடிப்பதற்கும் என்ன யோசனைகள் பிரதம நீதிபதியிடமிருந்து அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அது பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Gold Control Order

* 105 *Q.*—Sri K. CHEEMAICHAMY (on behalf of Sri P. K. MOOKIAH THEVAR): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any representation recently from the Madras Bullion Association for a realistic and genuine approach to the Gold Control Order; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) No such representation appears to have been received with this Government.

(*b*) The question does not arise.

திரு. க. ர. நல்லசிவம் : இது போன்ற ஒரு கோரிக்கை வரா விட்டாலுங்கூட, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்குத் திட்டவட்டமான முறைகள் ஏதாவது சர்க்கார் வைத்திருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தங்க நகைகளை அடகு பிடித்தவர்கள், அடகு பிடித்த சாமான்களை ஏலம் போட்டு விற்க முடியவில்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவின் காரணமாக 14 காரட்டுக்கு மேல் உள்ளவற்றை விற்க முடியாது என்று இருந்தது. அடகு பிடித்தவற்றை ஏலத்தில் விற்க அனுமதிக்க வேண்டும் என்று ஒரு முக்கியமான கோரிக்கையாக இருந்தது. அதுபற்றி இந்த ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதியதன் பேரில், அவர்களும் அதை மாற்றியிருக்கிறார்கள். அதுதான் அவர்கள் பொதுவாகச் சொன்ன முக்கிய கோரிக்கை. அது இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : சாதாரணமாக நகை செய்கின்ற பொற்கொல்லர்கள் தங்களிடம் வந்த நகையினுடைய காரட் விவரமும் அழித்த பிறகு இருந்த காரட் விவரமும், நகையாகச் செய்து

27th February 1964]

கொடுக்கப்பட்டபின்பு இருக்கிற காரட் விவரமும் எழுதி வைக்க வேண்டும் என்கிற நிர்பந்தம் இருக்கிறது. எழுத்தறிவு நிறைய இல்லாத சாதாரண பொற்கொல்லர்களை இது மிகவும் பாதிப்ப தால், அந்தக் கட்டுதிட்டத்தை நீக்க, தன்னிடம் வந்த நகைகளை அப்படியே தேவைப்படி செய்துகொடுக்கின்ற அளவுக்கு வசதி செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறதா? அல்லது அவ்வாறு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதுபற்றிய விதிகளெல்லாம் மத்திய சர்க்கார் போடுகிறார்கள். அதனால், இத்தகைய கேள்விகளெல்லாம் மத்திய சர்க்காருக்குத்தான் போடவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: விதிகள் மத்திய சர்க்கார் போடு கிறார்கள் என்பது உண்மை. ஆனால், அவற்றை அமுல் நடத்தும் பொறுப்பு ராஜ்ய சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று மத்திய சர்க்கார் அறிவித்திருப்பது அமைச்சர் அவர் களுக்குத் தெரிந்திருக்கும். இதுசம்பந்தமாக விதிகள் எல்லாம் நம்முடைய ராஜ்ய சர்க்காருக்கு வந்துவிட்டனவா? அவற்றை அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டனவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது பொதுவாகக் கேட்கக் கூடிய கேள்வியாக இருக்கிறது. 'விதிகள் எல்லாம் வந்து விட்டனவா? நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டதா? இப்படி யெல்லாம் கேட்பது வழக்கமான கேள்வியாகப் போய்விட்டது. இப்படிப்பட்ட கேள்விகளுக்கு, 'தகுந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது, என்றுதான் பொதுவாக பதில் சொல்ல முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சென்ற சட்டசபைக் கூட்டத்தில், 'தங்கக் கட்டுப்பாடு சட்டத்தை மத்திய சர்க்கார் தளர்த்தியிருக் கிறது என்றுதான் வெளியிட்டார்கள்; விதிகள் பிறப்பிக்கப்பட வில்லை. விதிகள் வரவில்லை; விதிகள் வந்த பிறகுதான் யோசிக்க வேண்டும்', என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை யொட்டித்தான் 'விதிகள் வந்துவிட்டனவா' என்று கேள்வி கேட்டேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: விதிகள் அவ்வப்போது வந்து கொண்டே இருக்கும். 'எந்த விதிகள் வந்து விட்டன?' என்று குறிப்பாக கேட்டால் அதற்குப் பதில் சொல்ல முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பழைய நகைகளை அழித்து, அந்தத் தரத்திற்கு உயராமல் நகை செய்யலாம் என்பது சம்பந்த மான விதிகள் வந்துவிட்டனவா? அதையொட்டிப் பொற் கொல்லர்கள் என்ன செய்ய வேண்டும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்கான விதிகள் வந்து விட்டன. லைசன்ஸ்தார்களுக்கும் அதுபற்றி அறிவிக்கப்பட்டிருக் கிறது. பழைய நகைகளை அழித்து, அதே காரட்டுக்கு புதிய

[27th February 1964

நகைகளைச் செய்ய முடியும். அதற்காக லைசன்ஸ் வாங்கவேண்டும். லைசன்ஸ் வாங்குவதற்கான கட்டணம் ஒரு ரூபாய். இப்படி யெல்லாம் குறிப்பிட்டு விதிகள் வந்திருக்கின்றன.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]

II—ADJOURNMENT MOTIONS.

(1) Arrest of D.M.K. Volunteers and failure to protect D.M.K. Councillors of Madras Corporation.

11-30 a.m. (2) Failure to protect political leaders in Madras City against rowdy elements.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர் களே, நான் ஒரு ஒத்தி வைப்புப் பிரேரணையைத் தங்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். அதற்கான. . .

திரு. மீ. கலியாணசுந்தரம் : சபையின் முன் உள்ள விஷயம் என்ன என்று தெரியவில்லையே.

கனம் சபாநாயகர் : அதைக் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எது சம்பந்தமாக ஒத்திவைப்புப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தால் நல்லது.

கனம் சபாநாயகர் : கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதையும் சுருக்கமாகச் சொல்லிவிடலாம்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர் களே, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைத் தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அதைக் கொண்டுவருவதற்கான காரணம், இப்பொழுது சென்னை மாநகரத் தைப் பொறுத்தவரையிலும் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையைப் பற்றிய ஒன்றாகும். இப்பொழுது நடைபெற்று முடிந்த மாநகர மன்றத் தேர்தலைப் பொறுத்து, எங்கு பார்த்தாலும் பீதி அடையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நிரபராதிகளும் தேர்தலிலே பங்குபெற்ற பலரும் காரண காரியமில்லாமல் கைது செய்யப் படவும், காவலில் வைக்கப்படவும் ஆன சூழ்நிலை ஆங்காங்கு ஏற்பட்டுள்ளது. தேர்தலைப் பொறுத்துக் காவல் துறையினர் தக்க பாதுகாப்புகளையும் நல்ல ஒழுங்கை நிலைநாட்டும் முறை களையும் ஏற்படுத்தியிருந்தார்கள் என்பதை நான் ஒப்புக் கொண்டாலும், இந்தத் தேர்தலில் ஈடுபட்ட சில எலெக்ஷன் ஏஜெண்ட்களும் காரணமில்லாமல் கைது செய்யப்பட்டார்கள். போலிங் பூத் ஏஜெண்ட்களும் கைது செய்யப்பட்டுக் காவலில், தேர்தல் அன்றே, வைக்கப்பட்டார்கள். சில இடங்களில், குறிப் பாக மயிலாப்பூர் தொகுதியில் திரு. கோவிந்தசாமி என்பவர் தேர்தல் வேட்பாளராக நின்றும், தொகுதியில் சுற்ற முடியாத